RÉPUBLIQUE
FRANÇAISE

*Liberté*
*Égalité*
*Fraternité*

**தண்டனைக்குட்படாத மிகவும் கடுமையான சர்வதேச குற்றங்களுக்கு எதிரான போராட்டத்திற்கு பிரெஞ்சு நீதித்துறை தகுதியானது.**

**சில நிபந்தனைகளின் கீழ்,** (**குறிப்பாக குற்றவாளி பிரான்சில் இருந்தால் அல்லது அவர் பிரெஞ்சுக்காரராக இருந்தால்**), **பொதுமக்கள் மோதல்** அல்லது **அடக்குமுறையின்** பின்னணியில் இடம்பெற்ற **பல கடுமையான குற்றங்கள் மற்றும் வன்முறைகளை** விசாரிக்க பிரான்ஸ் உண்மையில் தகுதிவாய்ந்தது.

குறிப்பாக, **பின்வரும் குற்றங்கள்** பிரெஞ்சு குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன

- **சித்திரவதைச்** செயல்கள்
- அரச நிர்வாகத்தின் ஒப்புதலுடன் அல்லது அதன் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்ட நபர்கள் பின்னர் **காணாமல் போவது**
- **படுகொலை** போன்ற **வாழ்க்கை மீதான தாக்குதல்கள்**
- ஒரு குழுவினரை **அழிப்பது**
- **அடிமைத்தனம்**
- **பாலியல் வன்முறைகள்**

அத்துடன், **ஒரு போரின் போது**:

- **பொது மக்கள்** மற்றும் **பொதுமக்கள் சொத்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள்**
- நகரங்கள் மற்றும் கிராமங்களை **சூறையாடுவது**
- பொதுமக்களை **பட்டினியால் வாட விடுதல்** மக்கள் மற்றும் அவர்களின் **உயிர்வாழும் வழிகளை அழித்தல்**
- பொதுமக்களின் ஒரு பகுதியை **இடமாற்றம் செய்தல்** மற்றும் **நாடு கடத்தல்**
- **சிறுவர் போராளிகளை** ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயன்படுத்துதல்
- **மருத்துவ கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் பணியாளர்களுக்கு** எதிரான தாக்குதல்கள், எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மருத்துவ ஊழியர்கள், ஆம்புலன்ஸ்கள் மற்றும் காயமடைந்தவர்கள்
- **மனிதாபிமான பணியாளர்கள் மற்றும் உபகரணங்களுக்கு** எதிரான தாக்குதல்கள்
- வரலாற்று நினைவுச்சின்னங்கள் போன்ற **கலாச்சார சொத்துக்களுக்கு** எதிரான தாக்குதல்கள்
- **நச்சு பதார்த்தம்**, **நஞ்சு கொண்ட ஆயுதங்கள், மூச்சுத்திணறல் அல்லது நச்சு வாயுக்களின்** பயன்பாடு

ஏதேனும் இந்த குற்றங்களில், நீங்கள் ஒரு சாட்சியாகவோ அல்லது பாதிக்கப்பட்டவராகவோ இருந்திருந்தால், அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது உடந்தையாளர் பிரெஞ்சு பிரதேசத்தில் இருப்பது அல்லது பிரெஞ்சு நாட்டவராக இருப்பது பற்றிய தகவல்கள் உங்களிடம் இருந்தால், உங்கள் பூரண தொடர்பு விவரங்களுடன் ஒரு கடிதத்தை பொது வழக்கறிஞருக்கு அனுப்பலாம்:

Tribunal de Grande Instance de Paris
Parvis du tribunal – Section AC5
75859 Paris cedex 17

**பிரெஞ்சு குற்றவியல் சட்ட நடைமுறைகளின் படி, உங்கள் அடையாளத்தைப் பாதுகாக்க பல வழிமுறைகள் உள்ளன.**